## உங்கள் வருகையின் போது உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்பாக வைத்திருத்தல்:

நீங்கள் மருத்துவமனையில் இருக்கும்போது உங்கள் மருத்துவமனை அடையாளக் கைப்பட்டியை அணியுங்கள்.

பின்வரும் நிலைமைகள் உங்களுக்கு இருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்:

- நீங்கள் கடந்த ஆண்டில் ஒரு தடவை கீழே விழுந்துவிட்டீர்கள்.
- உங்களுக்குக் கைத்தடி, நடைவண்டி, ஊன்றுகோல் அல்லது சக்கர நாற்காலி தேவை.
- உங்களுக்குக் குழப்பம், மயக்கம் ஏற்படுகின்றது அல்லது உங்கள் சமநிலையை இழக்கக்கூடும்.

உங்களுக்குத் தேவையான எந்த உதவியையும் வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

நிலையங்களில் இருக்கும் கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்தித் தொற்றுக் கட்டுப்பாட்டை மேம்படுத்த உதவவும்.

உங்கள் அணுகலைக் கட்டுப்படுத்தக்கூடிய எந்தவொரு நுழைதல், வெளியேறுதல் அல்லது நாங்கள் வழங்கும் சேவைகள் குறித்துக் கண்டறிந்து தடையற்ற சூழலை உருவாக்குவதற்கு எங்களுக்கு உதவவும்.

நீங்கள் செவிப்புலனற்றவராக, செவிப்புலன் இழந்தவராக அல்லது செவிப்புலன் குறைந்தவராக இருந்தால், உங்கள் ஸ்மார்ட்போனில் பயன்படுத்துவதற்கு எங்கள் இலவச விளக்கச் சேவைகள் அல்லது இலவச தலைப்புச் சேவை ஆப்ஸைக் கேளுங்கள்.

அனைவருக்கும் சமமான பராமரிப்பை வழங்குவதில் நாம் பெருமிதம் கொள்கின்றோம். உங்கள் உதவியுடன், நாங்கள் எங்கள் சேவையை மேம்படுத்திப் பாதுகாப்பான ஒரு சுகாதாரச் சூழலை வழங்க முடியும். உங்கள் வருகையின் போது:

- நாங்கள் எப்படிச் செயற்படுகிறோம் என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
- உங்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்க முடியும் என்றால் எங்களிடம் கூறுங்கள்.
- உங்களுக்குப் புரியாத எதையும் பற்றி எங்களிடம் கேள்விகளைக் கேளுங்கள்.

Form 300369 (05/2023)

**Birchmount hospital**
3030 Birchmount Road
Scarborough, ON M1W 3W3
416-495-2400

**Centenary hospital**
2867 Ellesmere Road
Scarborough, ON M1E 4B9
416-284-8131

**General hospital**
3050 Lawrence Avenue East
Scarborough, ON M1P 2V5
416-438-2911

@SHNcares
SHN.ca

# SHN நோயறிதலுக்கான Ultrasound

## நோயாளிகள் மற்றும் குடும்பங்களுக்கான

SHN
SCARBOROUGH HEALTH NETWORK

## Ultrasound என்றால் என்ன?

அல்ட்ராசவுண்ட் அல்லது சோனோகிராம் என்பது உடலின் உள்ளே உள்ள கட்டமைப்புகளைக் காட்சிப்படுத்த ஒலி அலைகளைப் பயன்படுத்தும் ஒரு பரிசோதனை ஆகும்.

ஒலி அலைகளைக் கடத்துவதற்கு ஒரு டிரான்ஸ்யூசர் (அல்லது ஆய்வு) பயன்படுத்தப்படுகிறது மற்றும் பெறப்படும் அலைகள் (அல்லது எதிரொலிகள்) காட்சிப் படமாகக் காட்டப்படும்.

அல்ட்ராசவுண்ட் படங்கள் சரியான தருணத்தில் எடுக்கப்படுகின்றன, எனவே அவை திசுக்கள் மற்றும் உறுப்புகளின் இயக்கம், இரத்த ஓட்டம் மற்றும் அமைப்பு ஆகியவற்றை நிரூபிக்கப் பயன்படுகின்றன. மேலும் ஆய்வுகளுக்குரிய (பயாப்ஸிகள்) திசு மாதிரிகளைக் கண்டறிந்து அகற்றுவதற்கு இது ஒரு பெறுமதி மிக்க கருவியாகும்.



## நான் எதிர்பார்க்க வேண்டியது என்ன?

நீங்கள் மேலங்கி ஒன்றை அணியும்படி கேட்டுக் கொள்ளப்படுவீர்கள். அல்ட்ராசவுண்ட் பரிசோதனையின் போது, நீங்கள் ஒரு பரிசோதனை செய்வதற்குரிய கட்டில் அல்லது ஸ்ட்ரெச்சரில் படுத்துக் கொள்வீர்கள். உங்கள் தோல் மற்றும் அல்ட்ராசவுண்ட் டிரான்ஸ்யூசர்/ஆய்வு ஆகியவற்றுக்கிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்த உங்கள் தோலில் ஜெல் பூசப்படும். உங்கள் மருத்துவரால் கோரப்பட்டுள்ள உறுப்புகளைக் காட்சிப்படுத்தவும் குறிப்பிட்ட கட்டமைப்புகளை மதிப்பீடு செய்யவும் உங்கள் தோலில் அழுத்தத்தின் அளவை மாற்றியமைக்க டிரான்ஸ்யூசர்/ஆய்வு ஒன்றை அல்ட்ராசவுண்ட் தொழில்நுட்பவியலாளர் பயன்படுத்துவார்.

அல்ட்ராசவுண்ட் அயனியாக்கும் கதிர்வீச்சைப் பயன்படுத்துவதில்லை மற்றும் அறியப்பட்ட அபாயங்கள் எதுவும் இதில் இல்லை.

ஸ்கேன் செய்யும் போது, உங்கள் மூச்சை உள்ளிழுத்துப் பிடித்து வைத்துக்கொண்டு, விரும்பிய படங்களைப் பெறுவதற்கு, நிலையை மாற்றும்படி கேட்கப்படலாம்.

## Ultrasoundக்கு என்னைத் தயார் செய்வது எப்படி?

மகப்பேறியல், மகளிர் மருத்துவம் அல்லது வயிற்றுக்குழிப் பரிசோதனைகளுக்கு சிறுநீர்ப்பை முழுமையாக நிரம்பியிருக்க வேண்டும். உங்கள் சந்திப்பு நேரத்திற்கு முன் 25-30 அவுன்ஸ் தண்ணீர் குடிக்கும்படி கேட்கப்படுவீர்கள்.

கல்லீரல், பித்தப்பை, கணையம் அல்லது சிறுநீரகம் போன்ற வயிற்றுப் பரிசோதனைகளுக்கு, உங்களுடைய ஸ்கேன் செய்வதற்கு 4 மணி நேரத்திற்கு முன்பு நீங்கள் சாப்பிடுவதையோ குடிப்பதையோ நிறுத்திவிட வேண்டும். உங்கள் வழக்கமான மருந்தை மிகக் குறைந்தளவு தண்ணீருடன் எடுத்துக்கொள்வது நல்லது.

கூடுதலான அல்லது குறிப்பிட்ட வழிமுறைகள் ஏதாவது இருந்தால்
எங்கள் முன்பதிவு துறை உங்களுக்கு அறிவுறுத்தும்.

## Ultrasound ஸ்கேன் செய்ய எவ்வளவு நேரம் எடுக்கும்?

அல்ட்ராசவுண்ட் வகையைப் பொறுத்து, இது 30-60 நிமிடங்கள் வரை மாறுபடும்.



ஸ்கேன் படங்கள் ஒரு கதிரியக்க நிபுணர் (இமேஜிங் நிபுணர்) மூலம் விளக்கப்படும் மற்றும் முடிவுகள் உங்கள் மருத்துவருக்கு அனுப்பப்படும்.

அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் செய்வதால் பக்க விளைவுகளோ அல்லது பின்விளைவுகளோ இல்லை, எனவே ஸ்கேன் செய்த பிறகு நீங்கள் வாகனம் ஓட்டலாம், சாப்பிடலாம், குடிக்கலாம் மற்றும் இயல்பான செயல்களுக்குத் திரும்பலாம்.

## பின்வரும் நிலைமைகள் உங்களுக்கு இருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்:

- உங்கள் சந்திப்பிற்கு முன்னர், சோதனைக்குத் தேவையான எந்த வழிமுறைகளையும் செய்ய முடியவில்லை என்றால்.
- உங்கள் அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் பற்றி ஏதாவது கேள்விகள் அல்லது கரிசனை உள்ளன என்றால்.